# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8102065

1. District மாவட்டம் : திருச்சி    PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு    Year: ஆண்டு 2018    FIR No.: மு.த.அ. எண் 04/18    Date: நாள் 26.07.2018

2. (i) Act சட்டம்: PC Act 1988    Sections பிரிவுகள்: 7 of PC Act
   (ii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from : நாள் முதல் 15.03.2017    Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு    Time from : நேரம் முதல் 10.00 hrs    Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 15.03.2017    Time : நேரம் 12.30 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்    Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக    எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்    சுமார் 85 K.M வடக்கு
   Beat Number : முறைக் காவல் எண்    (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்    District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K. இளங்கோவன்    (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் கலியபெருமாள்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 18. [illegible] 1964    (d) Nationality : நாட்டினம் இந்தியன்    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்    Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation தொழில் பணியாளர்    (g) Address : முகவரி B.91 புதிய வீட்டு வசதி வாரியம், துறையூர், திருச்சி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   P. முத்துராமன், தலைவர், ~~X~~ பச்சைமலை, மலைவாழ் மக்கள் பெரும் பல நோக்கு கூட்டுறவு சங்க லிட், செங்காட்டுப்பட்டி, துறையூர், திருச்சி.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   முதல் கட்ட விசாரணை நடத்தப்பட்டு, இயக்குநரக உத்தரவு பெறப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டது.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

கனம் திருச்சி ஊழல் தடுப்பு சிறப்பு நீதிபதி (ஊழல் தடுப்பு சட்டம் 1988) நீதிமன்றம் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

சென்னை இயக்குனரக நமுனா எண். 21598/VAC-4/2018 dt. 02.07.2018 இன் அறிவுரையின்படியும், சென்னை, இயக்குநரக நமுனா எண். PE107/2017/CO-OP/TR நாள் 10.07.2018–ல் கண்ட குறிப்பாணையின்படியும் புகார்தாரர் க.இளங்கோவன், த/பெ கலியபெருமாள், B.91, புதிய வீட்டு வசதி வாரியம், துறையூர், திருச்சி மாவட்டம். (செயலாளர் (தற்காலிக பணி நீக்கம்), YM 35, பச்சைமலை மலைவாழ் மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவு சங்கம் லிட், மேல்செங்காட்டுப்பட்டி) என்பவரின் எழுத்து பூர்வ தகவலை கொண்டு புகாரினை பரிசீலனை செய்து எதிரி பி.முத்துராமன், தலைவர், YM 35, பச்சைமலை மலைவாழ் மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவு சங்கம் லிட், மேல் செங்காட்டுப்பட்டி, துறையூர், திருச்சி மாவட்டம் என்பவர் மீது வழக்கு பதிவு செய்கிறேன். இவர் ஊழல் தடுப்பு சட்டம் 1988 பிரிவு 2( c) யின் படி பொது ஊழியர் ஆவார். மேற்கண்ட புகாரின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர்: க.இளங்கோவன், த/பெ கலியபெருமாள், B-91, புதிய வீட்டு வசதி வாரியம், துறையூர்,

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed …………………. Rank …………………. to take up the Investigation / Refused Investigation / transferred to PS…………………………………….on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் [illegible]... பதவி [illegible] நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு [illegible] காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

26/7/18

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 26/7/2018
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் F. [illegible]
Rank: நிலை ஆய்வாளர் No. எண் ………
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருச்சி

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

**திருச்சி ஊழல் தடுப்ப மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண். 04/2018–இன் தொடர்ச்சி**

திருச்சி மாவட்டம். செயலாளர் (தற்காலிக பணி நீக்கம்), YM 35, பச்சைமலை மலைவாழ் மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவு சங்கம் லிட், மேல்செங்காட்டுப்பட்டி. பெறுநர்: காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருச்சி. அய்யா, நான், துறையூர் புதிய வீட்டு வாரிய குடியிருப்பில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான், கடந்த 2004 ஆம் ஆண்டு முதல் YM 35, பச்சைமலை மலைவாழ் மக்கள் பெரும் பலநோக்கு கூட்டுறவு சங்கம் லிட், மேல்செங்காட்டுப்பட்டியில் பணிபுரிந்து, கடைசியாக செயலாளராக பணிபுரிந்து வந்தேன். வெள்ள நிவாரண தொகையை பயனாளிக்கு வழங்காமல், அந்த தொகையை 26.03.2016 அன்று திருச்சிராப்பள்ளி, மத்திய கூட்டுறவு வங்கியின் மத்திய கால கடன் நிலுவைக்காக மடைமாற்றி சங்கத்தலைவர் திரு.முத்துராமன் மற்றும் முதுநிலை எழுத்தர் எம்.ரவிச்சந்திரன் ஆகிய இருவரும் செலுத்தியுள்ளனர். இது தொடர்பாக, முதுநிலை எழுத்தர் திரு.எம்.ரவிச்சந்திரன்னையும், அவ்வாறு மடைமாற்றி செய்ததை தவறு என அறிவுருத்த தவறிய குற்றத்திற்காக என்னையும், கடந்த 03.08.2016 அன்று தற்காலிக பணிநீக்கம் செய்தனர். என் மீதான குற்றச்சாட்டு சம்மந்தமாக பெரம்பலூர் கூட்டுறவு சார்பதிவாளர் விசாரணை நடத்தி எனக்கு 3 மாத காலத்திற்கு திரண்டபயனின்றி ஊதிய உயர்வு நிறுத்தம் என தண்டனைக்கு பரிந்துரைத்து அறிக்கை கொடுத்துள்ளார். எனவே என் மீதான குற்றச்சாட்டு சம்மந்தான விசாரணை முடிவடைந்ததால் மீண்டும் பணி நியமனம் கேட்டு தலைவர் திரு.பி.முத்துராமன் அவர்களுக்கு கடந்த 23.02.2017ம் தேதி மனு அளித்தேன். அவர் பணி உத்திரவு வழங்குவதாக கூறினார். ஆனால் எனக்கு பணி உத்திரவு எதுவும் வழங்கப்படவில்லை. அதனால் இன்று 15.03.2017 காலை சுமார் 10 மணிக்கு மேல்செங்காட்டுப்பட்டியில் உள்ள YM 35, பச்சைமலை மலைவாழ் மக்கள் பெரும்பல் நோக்கு கூட்டுறவு சங்கம் லிட் சென்று, அங்கு, தலைவர் திரு.பி.முத்துராமன் அவர்களை சந்தித்து, எனக்கு பணி உத்திரவு ஆணையினை கேட்டேன். அவர் என்னிடம், உங்களுக்கு பணி உத்திரவு ஆணை வழங்க வேண்டும் என்றால், எனக்கு ரூ.5000/–மும், கூட்டுறவு சங்க நிர்வாக குழு இயக்குநர்களுக்கு மொத்தம் ரூ.10,000/–மும் ஆக மொத்தம் ரூ.15,000/–ஐ என்னிடம் கொடுத்துவிடுங்கள் என கூறினார். அதற்கு நான் அவரிடம், வேலையில்லாமல் தற்காலிக பணி நீக்கத்தில் 6 மாத காலமாக இருந்து வருகிறேன். என்னிடம் அவ்வளவு பணம் இல்லை தலைவரே என கூறினேன். அதனால், தலைவர் முத்துராமன் என்னிடம், ரூ.15,000/–ஐ கொடுத்தால்தான் பணி உத்திரவு வழங்க முடியும் என்று கூறினார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லை. இருந்தாலும் அப்போதைக்கு அவரிடம் பணம் ரெடி செய்துவிட்டு வந்து கொடுக்கிறேன் என்று கூறிவிட்டு வந்துவிட்டேன். என்னுடைய தற்காலிக

பணி நீக்கத்தை ரத்து செய்து, மீண்டும் பணி வழங்கி உத்தரவிடுவதற்கு என்னிடம் லஞ்சம் கேட்ட திரு.பி.முத்துராமன் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு உண்மையுள்ள (sd) இளங்கோவன், 15.03.2017. Received this petition in person on 15.3.2017 at 12.30 hrs Sd(xxxx) F.Xavier Rani, Inspector of Police, V&AC, Trichy. இந்த புகாரை அன்றே மின்னஞ்சல் மூலம், சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, இயக்குநரகத்திற்கு அனுப்பி, அந்த புகார் குறித்து முதல் கட்ட விசாரணை செய்ய சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரக நமுனா எண்.PE107/2017/Co-Op/TR, dt.15.03.2017-ன்படி அனுமதி பெற்று புகாரில் கூறப்பட்டுள்ளதின் உண்மை தன்மையை அறிந்து கொள்ள குரல் பதிவு செய்ய வேண்டி த.கா.740 திரு.விஜயபாஸ்கர் என்பவரை புகார்தாரர் திரு.இளங்கோவனுடன் அனுப்பி திருச்சி மாவட்டம், துறையூர், மேல்செங்காட்டுப்பட்டி YM 35, பச்சைமலை மலைவாழ் மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவு சங்கம் லிட், தலைவராக பணிபுரிந்து வரும் திரு.பி.முத்துராமனுக்கும் புகார்தாரர் இளங்கோவனுக்கும் இடையே நடைபெறும் உரையாடலை அதாவது அவர்களின் குரல் பதிவினை பதிவு செய்தும், குற்றம் சாட்டப்பட்ட அலுவலர் திரு.பிமுத்துராமன் மற்றும் புகார்தாரர் திரு.க.இளங்கோவன் ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி முதல் நிலை விசாரணை செய்தும் வரும்படி அறிவுருத்தப்பட்டது. அதன்படி 15.03.2017 அன்று மாலை சுமார் 4.00 மணிக்கு குற்றம் சாட்டப்பட்ட அலுவலர் திரு.பிமுத்துராமனை சந்தித்த போது, மேற்படி புகார்தாரர் திரு.க.இளங்கோவனிடம், குற்றம் சாட்டப்பட்ட அலுவலர் திரு.பி.முத்துராமன் கையூட்டாக பணம் கேட்டுள்ளார் என்பதற்கான முகாந்திரம் இருப்பதாக தெரியவந்தது. புகார்தாரரை மறுநாள் 16.03.2017 அன்று காலை திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு எதிரி திரு.பி.முத்துராமன் கையூட்டாக கேட்ட பணத்தை ஏற்பாடு செய்து கொண்டு வருமாறு அறிவுருத்தி அனுப்பப்பட்டது. புகார்தாரர் திரு.க.இளங்கோவன் மறுநாள் 16.03.2017ஆம் தேதி அலுவலகம் வரவில்லை. ஆனால், புகார்தாரர் 17.03.2017 அன்று என்னை கைபேசியில் தொடர்பு கொண்டு, எதிரி திரு.பி.முத்துராமன் 16.03.2017 அன்று புகார்தாரரை போனில் தொடர்பு கொண்டு, மறுநாள் 17.03.2017ஆம் தேதி எதிரி பி.முத்துராமனை எதிரியின் அலுவலகமாகிய YM 35, பச்சைமலை மலைவாழ் மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவு சங்கம் லிட், மேல்செங்காட்டுப்பட்டி, துறையூர், திருச்சி மாவட்ட அலுவலகத்தில் சந்தித்து மீளப்பணியமர்த்தம் செய்யும் ஆணையினை பெற்று பணிக்கு அறிக்கை செய்துகொள்ளும்படி கூறியதாக என்னிடம் கூறினார். மேலும், தன்னிடம் எதிரி பி.முத்துராமன் லஞ்சமாக கேட்ட ரூ.15.000/–த்தை இதுநாள் வரையில் தன்னால் ஏற்பாடு செய்ய இயலவில்லை என்று

கூறினார். மறுநாள் 17.03.2017 அன்று காலை புகார்தாரர் தன்னிச்சையாக எதிரி திரு.பி.முத்துராமனை சந்தித்து மீளப்பணியமர்த்தம் செய்த ஆணையினை பெற்று, அன்றே பணியில் சேர்ந்துள்ளார் என்கிற தகவலும், புகார்தாரர் ரூ.15,000/—த்தை தயார் செய்ய இயலவில்லை என்ற தகவலும் கிடைத்தது. எனவே, மேற்படி அனுமதியின் பேரில் 15.03.2017 ஆம் தேதி அன்று புகார்தாரர் திரு.இளங்கோவனால் கொடுக்கப்பட்டுள்ள மேற்படி புகாரின் அடிப்படையில் பரிசீலனை செய்து, சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குநர் அவர்களின் உத்தரவுபடி இன்று 26.07.2018 ஆம் தேதி 11.00 மணிக்கு திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 04/2018 பிரிவு 7 ஊழல் தடுப்பு சட்டம் 1988—ன்படி திருச்சி மாவட்டம், துறையூர், மேல்செங்காட்டுப்பட்டி, YM 35, பச்சைமலை மலைவாழ் மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவு சங்கம் லிட், தலைவராக பணிபுரிந்து வரும் எதிரி பி.முத்துராமன் என்பவர் மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்படுகிறது.

Submitted to the Court of the Hon'ble Special Judge for the trial cases of the PC Act-1988, Trichy. Received this report on 15.03.2017 at 12.30hrs and conducted a Preliminary Enquiry. Registered a case in Trichy V&AC Cr.No. 04/2018 u/s 7 of PC Act 1988 on 26.07.2018 at 11.00 hrs (Sd) F.Xavier Rani, 26.07.2018, Inspector of Police, V&AC, Trichy.

26/7/18
[F. Xavier Rani]
Inspector of Police,
V&AC, Trichy.